**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 25/2021**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
| NAME | செல்வம் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 07.01.2026.

**பிரதிவாதி தரப்பில் கூடுதல் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| S.No | Description of Documents |
|---|---|
| 1. | 03.10.1989 தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் (பத்திர எண்.3718/1989) (பி.சா.ஆ.1) |
| 2. | 18.02.1991 தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் (பத்திர எண்.648/1991) (பி.சா.ஆ.2) |
| 3. | 04.05.2015 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் (பத்திர எண்.3857/2015) (பி.சா.ஆ.3) |
| 4. | 17.12.1998 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் (பத்திர எண்.5517/1998) (பி.சா.ஆ.4) |
| 5. | தொழில் வரி ரசீதின் அசல் (எண்.0007197) (பி.சா.ஆ.5) |
| 6. | குடிநீர் கட்டண வரி ரசீதின் அசல் (எண்.0007199) (பி.சா.ஆ.6) |
| 7. | சொத்து வரி ரசீதின் அசல் (எண்.0007198) (பி.சா.ஆ.7) |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் தாக்கல் செய்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி கிழக்கு மேற்கு 10 அடி, வடக்கு தெற்கு 60 அடி என 600 அடி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த சொத்திற்குண்டான குடிநீர் வரி மற்றும் சொத்துவரி

நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 17.12.1998 தேதியிட்ட ஆவணம் என்ன ஆவணம் என்றால் அது விற்பனை பத்திரம்.

2. அந்த ஆவணத்தின் படி எனது தாயார் வசந்தம்மாள் விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் வசந்தம்மாள் கிரயம் பெற்ற சொத்தை அவர் அனுபவிக்கிறாரா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தின் படி செக்குபந்தி என்னவென்றால் எனக்கு புரியவில்லை. மேற்படி பி.சா.ஆ.4 ஆவணம் போலியானது என்றாலும் அதுபோல் ஒரு சொத்து இல்லை என்றால் சரியல்ல.

3. சர்வே எண்.12/5 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதா என்றால் ஆமாம், நாங்கள் வாங்கும்போது கூரை வீடு இருந்தது. எங்களுடைய மனை எண் என்னவென்றால் ஞாபகமில்லை. வாதியின் சொத்துக்கான மனை எண் தெரியுமா என்றால் தெரியாது. என் சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் மனை எண் உள்ளது என்றாலும் ஆனால் பி.சா.ஆ.4 ஆவணத்தில் எந்த மனை எண்ணும் குறிப்பிடவில்லை என்றாலும் அதனால் அந்த ஆவணம் போலியானது என்றால் சரியல்ல, மனை எண் கொடுக்கவில்லை.

4. ஒரு மனைக்கு குறைந்தபட்ச நீளம், அகலம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியாது. வசந்தம்மாள் எந்த காலத்திலும் சொத்தை எனக்கு எழுதிகொடுக்கவில்லை என்பது சரி என்றால் சரிதான். 1998 ஆவணம் போலியானது என்பதால் எனக்கு எந்த ஆவணத்தையும் முறை ஆவணமாக வசந்தம்மாள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் அவர் உயிரோடு இருக்கிறார் இறந்தபிறகு சொத்தை எடுத்துக்கொள்ள சொன்னார்.

5. பி.சா.ஆ.4–ல் உள்ள சொத்துவிவரம் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2–ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் படிக்க நேரமாகும் படித்து காட்டினால் சொல்கிறேன். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 ஆவணத்தில் செக்குபந்தி ரயில்வே ஸ்டேசன் ரோடுக்கு வடக்கு, மனை எண்.74–க்கு தெற்கு, லேட்.டி.வேணு வீட்டிற்கு கிழக்கு, டி.சி.வேலன் வீட்டுக்கு மேற்கு என உள்ளது என்றால் சரிதான். அதனால் பி.சா.ஆ.4 ஆவணம் போலியானது என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.